**IN THE COURT OF II JUDGE, SMALL CAUSES, CHENNAI**

---

**M.C.O.P.No.3649/2023**

Deposition of Witness : PW 1
Name : Divyasree

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 18th day of December 2024.

---

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் M.B.A., படித்துக்கொண்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டது. எனக்கு காயங்கள் ஏற்பட்டதால் ஒரு வருடம் நான் கல்லூரிக்கு செல்லவில்லை. நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் நான் விபத்தின்போது தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதாக சொல்லியுள்ளேன், அது எந்த நிறுவனம் என்றால் பெயர் மறந்துவிட்டது. என்னுடைய வேலை மற்றும் வருமானத்தை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது 1வது எதிர்மனுதாரர் வாகனம் பின்னால் வந்து மோதி விபத்து ஏற்பட்டது. ம.சா.ஆ.2 ஆவணத்தில் எந்தவிதமான வெளிக்காயமும் ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு உள்காயங்கள் ஏற்பட்டது. மோட்டார் வாகன ஆய்வுக்கு என்னுடைய வாகனம் உட்படுத்தப்பட்டது, அந்த ஆய்வறிக்கை நான் தாக்கல் செய்யவில்லை. 15.06.2023 அன்று

மதியம் 02.30 மணியளவில் விபத்து நடந்தது. ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணத்தில் விபத்து நடந்த நேரம் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்த விதத்தை காரில் உள்ள காமிரா மூலம் பதிவு செய்யப்பட்டு அந்த பதிவு குறுந்தகட்டில் பதிவிறக்கம் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. நான் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது எதிரே வந்த TN 18 Y 6313 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை பார்த்துவிட்டு நான்தான் 1வது எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. கார் மோதிதான் விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனம் செல்லக்கூடிய இடத்தில் நான் செல்லாமல் நான்கு சக்கர வாகனம் செல்லக்கூடிய இடத்தில் நான் இருசக்கர வாகனம் ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய வயது, வருமானம், தொழில் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களிடம் இருந்து இழப்பீடு பெறுவதற்கு பொய்யான மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றும், 1வது எதிர்மனுதாரர் குறித்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது இடது ஓரத்தில்தான் செல்வேன். கார் எனது வாகனத்தின் பின்பக்கம் மோதிதான் விபத்து ஏற்பட்டது. விபத்தினால் எனக்கு இடதுகாலில் இரண்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. எலும்பு முறிவு ஏற்பட்டது என்பதை காண்பிக்க X Ray தாக்கல் செய்யவில்லை. நான் மருத்துவமனையில் ஒருநாள்தான் சிகிச்சை பெற்றேன் என்றால் சரி. அதன்பிறகு புத்தூர் கட்டு போட்டிருந்தேன். மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து இரும்பு பிளேட் பொருத்தவேண்டும் என்று சொன்னதால் பாரம்பரிய மருத்துவத்தின் கீழ் நான் கட்டு போட்டுக்கொண்டேன். அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று சொன்னதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாவுகட்டுதான் எனக்கு போட்டார்கள். அறுவை சிகிச்சை செய்யவில்லை. ஒரு வருடம் புத்தூர் கட்டு போட்டிருந்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதுபோல் ஆவணங்கள் எதுவும் கொடுக்கமாட்டார்கள். மருத்துவ செலவை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. போக்குவரத்து செலவை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆனால் நான் வாடகை காரில்தான் செல்வேன். கல்வி தகுதி

சான்றிதழ் மற்றும் வருமானத்தை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் மற்றும் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தற்போது நான் கல்லூரிக்கு செல்லவில்லை என்றால் தனியாக செல்லமுடியவில்லை என்பதால் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டேன். நான் என்னுடைய படிப்பை தொடர்ந்து படித்து வருகிறேன் என்றும் ஆனால் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றும், நான் அஜாக்ரதையாகவும், கவனக்குறைவாகவும் சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றும், அதனால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை.

Sd./
Signature of witness

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date: 18.12.2024

Sd./
II Judge,
Court of Small Causes, Chennai